III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.473/2019

Deposition of witness for the Plaintiff/PW3
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 16-08-2023

| | | | |
|---|---|---|---|
| Name | :P.Senthil Vel | Caste | : |
| Father's/Husband's Name: | Ponraj | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk: | |

முதல் விசாரணை

நான் **சென்னை எழும்பூரில் உள்ள சிப்காட் தலைமை அலுவலகத்தில் தனிவட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன்.** 30.09.2017 முதல் 05.06.2019 வரை நான் மதுரவாயலில் வட்டாட்சியராக பணியாற்றி வந்தேன். நான் மதுரவாயலில் பணிபுரிந்த போது தாவா சொத்தை அளந்து எல்லைகளை காட்டும்படி திருவள்ளூர் நில அளவை பதிவேடுகள் துறையின் உதவி இயக்குனரிடமிருந்து தாக்கீது வந்தது. அதன் பேரில் வட்ட துணை ஆய்வாளர் மற்றும் சர்வேயரை அந்த இடத்திற்கு சென்று அளந்து பார்த்து எல்லைகளை காட்ட சொன்னேன். அதன் பேரில் அவர்கள் செய்தார்கள். பின்னர் நான் அவர்களுடன் சென்று அதன் எல்லைகளை பார்த்து தெரிந்து கொண்டேன். அது குறித்து வட்ட சாராய்வாளர் எனக்கு ஒரு அறிக்கை கொடுத்தார். அதன் அடிப்படையில் மனுதாரருக்கு நான் ஒரு அறிக்கை

கொடுத்தேன். அந்த அறிக்கை தான் தற்போது காண்பிக்கப்படும் ஆவணம். (அது வா.த.சா.7 ஆக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது). இது சம்மந்தமாக பூவிருந்தவல்லி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.393/2016 ல் சாட்சியம் அளித்தேன். அந்த சாட்சியம் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம். (அது வா.த.சா.16 ஆக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது).

<u>குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்தை அளப்பதற்கு நேரடியாக என்னிடம் மனு கொடுக்கவில்லை. திருவள்ளூர் நில அளவை பதிவேடுகள் துறையின் உதவி இயக்குனரின் உத்தரவின் பேரில் நான் தாவா சொத்தை அளப்பதற்கு ஏற்பாடு செய்தேன். அவ்வாறு எனக்கு வந்த மேற்கூறிய உத்தரவு வா.த.சா.7 ல் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு அளவீடு செய்வதற்கு உத்தரவு திருவள்ளூரிலிருந்து வந்தது. திருவள்ளூரிலிருந்து வந்தத உத்தரவை வா.த.சா.7 அறிக்கையில் ஊகுறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. சேப்பாக்கம் தலைமை அலுவலகத்திலிருந்து வந்த உத்தரவை பற்றி குறிப்பிட்டுள்ளேன். அந்த உத்தரவை வா.த.சா.7 உடன் இணைத்துள்ளேனா என்றால் இல்லை. 28.09.2017 ல் ஆர்.ஸ்ரீதர், கே.இராமசந்திரன் மனு கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த

மனுவின் பேரில் சேப்பாக்கத்தில் 28.09.2007 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது எழுத்து பிழையாக உள்ளது. அதன் சரியான வருடம் 2017. மனு கொடுத்த தினமே மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதற்கான காரணம் அந்த மனு திருவள்ளூருக்கு **forward** செய்யப்பட்டுள்ளது. ஆர்.ஸ்ரீதர், கே.இராமசந்திரன் கொடுத்த மனு எனக்கு அனுப்பினார்களா என்றால் அனுப்பியிருப்பார்கள். அவ்வாறு அனுப்பாமல் நான் நடவடிக்கை எடுத்திருக்க வாய்ப்பில்லை. சேப்பாக்கத்திற்கு மனுதார்கள் மனுவை நேரடியாக கொடுத்தார்களா அல்லது தபால் மூலம் அனப்பினார்களா என்பது எனக்கு தெரியாது. அவர்கள் கொடுத்த மனுவை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்திருப்பேன். அந்த மனுவில் வழக்கு எண் பற்றியோ வழக்கு சம்மந்தப்பட்ட இடம் குறிப்பிடிப்பட்டுள்ளதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் வட்டசார்வாளருக்கு அதன் பின்னால் எழுத்துபூர்வமாக உத்தரவு பிறப்பித்தேனா என்றால் ஆம். எந்த தேதி என்றால் கோப்பை பார்த்தால் தான் தெரியும். வா.த.சா.7 ல் அழைப்பானணயில் குறிப்பிடப்பட்டுள்ள 23.10.2017 தேதியிட்ட **corelation certificate** பற்றி குறிப்பிடப்படவில்லை. வா.த.சா.9 ல் எனது கையொப்பம் இல்லை. **corelation certificate** நான் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளது போல் ஞாபகம் உள்ளது. அந்த சான்றிதழ் சம்மந்தமாக நான் அழைப்பாணை பெற்ற பின்,

கோப்பில் பார்த்தேனா என்றால் இல்லை. கோப்பை பார்க்காமல் நான் எப்படி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மதுரவாயல் அலுவலகத்தில் உள்ள அந்த கோப்பை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. வட்ட துணை ஆய்வாளர் 07.10.2017 அன்று தாவா சொத்தை அளந்தார். எத்தனை மணிக்கு அவர்கள் தாவா சொத்தை அளந்தார்கள் என்றால் மதியம் நான் சென்று பார்த்தேன். வா.த.சா.7 நான் தாவா சொத்திற்கு நேரில் சென்றதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் தாவா சொத்திற்கு நேரடியாக செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நேரடியாக செல்லாததினால் தான் நான் எனது அறிக்கையில் சென்றதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா இடத்தை அளப்பதற்கு முன்னர் மனுதாரருக்கோ சுவாதீனத்தில் இருந்தவருக்கோ முன் அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் கொடுத்திருப்பார்கள். அந்த முன் அறிவிப்பு வா.த.சா.7 உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை அளக்கும் போது யார் யார் உடன் இருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. ஸ்ரீதர் உடன் இருந்ததாக வட்ட சார்ஆய்வாளர் என்னிடம் கூறினார். நான் அதை நேரடியாக பார்க்கவில்லை. ஸ்ரீதர் தாவா இடத்தில் இருந்தார் என்பது உண்மை தான். ஸ்ரீதர் தனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா இடத்தை அளக்கும் போது தான் வெளியூரில் இருந்ததாக

கூறியுள்ளார் ஆதலால் நான் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.த.சா.7 அறிக்கையின் ஒரு நகலை தான் ஸ்ரீதருக்கு கொடுத்தேன். வா.த.சா.7 ல் இருப்பது எனது கையொப்பம் தான். 09.10.2017 அன்று நான் வா.த.சா.7 ஐ ஸ்ரீதரிடம் கொடுத்தேன். வா.த.சா.7 ல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு சம்மந்தப்பட்ட பகுதி எந்த வழக்கினுடையது என்பது எனக்கு தெரியாது. நான் எந்த வழக்கு என்று வட்ட சார்ஆய்வாளரிடம் கேட்கவில்லை. மனுதாரரிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டதாக வட்ட சார்ஆய்வாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். காலை 09.30 மணியளவில் அந்த இடத்திற்கு சென்று வட்ட சார் ஆய்வாளரை அளக்க சொன்னேன். அவ்வேலை முடிவுறும் போது நான் அங்கு திரும்ப சென்றேன். இதற்கு முன்னர், காலையில் நான் அந்த இடத்திற்கு சென்றதாக சொல்லவில்லை என்றும் ஆதலால் நான் எப்போதும் தாவா இடத்திற்கு செல்லவே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி என்னிடம் கேட்டுக்கொண்டதன் பேரில் ஒரு பொய்யான அறிக்கை நான் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும் போதே தாவா சொத்தை பொய்யாக அளந்ததாக நான் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா இடத்தை அளந்ததற்கு நீதிமன்ற உத்தரவு ஏதாவது வந்ததா என்றால் இல்லை. மனுதார் தாவா இடத்தை அளக்கும் போது வெளியூரில் இருந்ததாக சொல்லியுள்ளார் என்றும் ஆனால் அவரிடம் கையொப்பம் பெற்றதாக

பொய்யாக சொல்லி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.